# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 09.09.2019</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 1606/B/18</u>**

திரு.பாஷாகான் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
கீழ்பென்னாத்தூர்
திருவண்ணாமலை மாவட்டம் — பொது அதிகார அமைப்பு

## <u>ஆணை</u>

இவ்வாணையத்தால் இன்று (09.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.பாஷாகான் அவர்கள் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர், திரு எஸ். மகாலட்சுமி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), கீழ்பென்னாத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 03.01.2018 தேதியிட்ட மனுவில், கீழ்பென்னாத்தூர் வட்டம், ஆவூர் கிராமம், வீட்டு எண் 389ல் திரு.முபாரக், த/பெ இப்ராஹிம் என்பவர் மாவு அரைக்கும் மில் அமைத்து நடத்தி வருகிறார் என்றும், இந்த மில்லுக்கு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் கடித எண் 7918/அ5/2012/2 இ (ஊ) நாள் 31.01.2013 திருவண்ணாமலை மாவட்ட அரசிதழ் நாள் 01.12.2013ல் வெளியிடப்பட்டுள்ளதன் படி தற்போது நடப்பில் உள்ள மேற்படி மில்லுக்கான உரிமம் யாரால் எந்த தேதியில் வழங்கப்பட்டது என்ற விவரம் சம்பந்தமாக தகவல் கோரி கீழ்பென்னாத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார். தமக்கு தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்றுத் தருமாறு தெரிவித்து 02.02.2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான

முதல் மேல்முறையீட்டு மனுவை கீழ்பென்னாத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் 28.02.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (09.09.2019) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு 06.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல் நேரிடையாக வழங்க எடுத்து வந்திருப்பதாக தெரிவித்து, அதன் நகலை சார்வு செய்தார். இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் தனக்கு வழங்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் பொய்யான தகவல்கள் என்றும், பொய்யான தகவல்களை தன்னால் ஏற்க இயலாது என்றும், தன்னுடைய வீடு குடிசை வீடாக இருப்பதால் பல்வேறு உடல் உபாதைகள் தனக்கு ஏற்பட்டுள்ளது என்றும், தான் கோரியுள்ள தகவல்கள் சம்பந்தமாக பல்வேறு கையூட்டு பெற்று கொண்டு, பல்வேறு ஊழல்கள் நடத்தியதாகவும் ஆணையத்தில் தெரிவித்து, எனவே தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்று தருமாறு ஆணையத்திடம் வேண்டி கொண்டார்.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த ஆவூர் கிராமத்தில் வசிக்கும் திரு.முபாரக் த/பெ இப்ராஹிம் என்பவரது மாவு அரவை மில்லிற்கு ஊராட்சி மன்றத் தலைவரால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன் நகல் மேற்படி கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்றும், ஆவூர் ஊராட்சியில் மாவு அரவை மில் இயக்குவதற்கு உரிம கட்டணம் ஆவூர் ஊராட்சி மன்றத்தில் செலுத்தப்பட்டதற்கு ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றும், அதனுடைய நகல்களும் மேற்படி கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் அனைத்தும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்று ஆணையத்தில் தெரிவித்து, இந்த இரண்டாம் மேல்முறையீட்டின் மீதான விசாரணையை முடித்து கொள்ளுமாறு ஆணையத்திடம் கேட்டு கொண்டார்.

5. மேற்சொன்ன ஆவணங்களை பரிசீலிக்கையில், மனுதாரருக்குரிய தகவல்கள் அவருக்கு முழுமையாக கிடைக்கவில்லை என்பதை நன்கு உணர முடிகிறது. இருப்பினும் மனுதாரர் பிரிவு 6(1)ல் கோரியுள்ள தகவல்களை மனுதாரருக்கு வழங்க வேண்டும் என ஆணையம் கருதி, மேற்படி மனுதாரரின் தகவல் சம்பந்தமான விசாரணையை, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்கள் தீர விசாரித்து 20 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஆணையம் உத்திரவிட்டு, இவ்வழக்கின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுக்கின்றன:-

1. **மனுதாரரின் 03.01.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்கள் தொடர்பாக, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கீழ்பென்னாத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு வருகை தந்து, மனுதாரர் கோரியுள்ள தகவல் அடங்கிய ஆவணங்களை தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(3)(b)ன்கீழ் ஆய்வுசெய்து, திருவண்ணாமலை கீழ்பென்னாத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டாட்சியர், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் / பொதுத்**

தகவல் அலுவலர், AD (P) மற்றும் மனுதாரரையும் விசாரணைக்கு அழைத்து, திருவண்ணாமலை DSP முன்னிலையில் விசாரணை மேற்கொண்டு, விசாரணை அறிக்கையை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 30 நாட்களுக்குள் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, மனுதாரர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலுடன் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்தில் நடைபெறும் மறுவிசாரணையன்று நேரிடையாக ஆஜராகி சமர்ப்பிக்க ஆணையம் உத்தரவிடுகிறது. மனுதாரரின் 03.01.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனு மற்றும் பொதுத் தகவல் அலுவலர் கீழ்பென்னாத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் கொடுத்த 06.09.2019 தேதியிட்ட தகவலின் நகல்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

2. வழக்கின் மறுவிசாரணை பிறிதொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும். அன்றைய தின விசாரணைக்கு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் தனது அறிக்கையுடனும் மற்றும் கீழ்பென்னாத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலக பொதுத் தகவல் அலுவலர் தனது அறிக்கையுடனும் ஆஜராக ஆணையம் உத்திரவிடுகிறது.

ஒம்/-ரா.பிரதாப்குமார்
மாநிலத் தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். SA 1606/B/18**

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருவண்ணாமலை மாவட்டம் (இணைப்புகளுடன்)

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
கீழ்பென்னாத்தூர்
திருவண்ணாமலை மாவட்டம்

திரு.பாஷாகான், த/பெ.அப்துல்சுபான்,
எண்.381, கிரசென்ட் முதல் தெரு,
ஆவூர் கிராமம்,
கீழ்பென்னாத்தூர் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்

Copy to: File / Stock File
SC/PA/12.09.2019